<u>பண்ணுருட்டி நகராட்சி</u>

***<u>மன்ற கூட்ட அழைப்பிதழ்</u>***

*************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **கார்த்திகை 14**, நாள் 30.11.2022 புதன்கிழமை **நேரம் முற்பகல் 11.30** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **"பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்"** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

# பண்ணுருட்டி நகராட்சி

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 30.11.2022–ந் தேதி புதன்கிழமை **முற்பகல் 11.30** மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

**1.** இந்நகராட்சியில் உள்ள Printer-க்கு Toner மை (Refilling) 30 எண்ணிக்கையில் புதியதாக refill செய்வதற்கும் நகர்மன்றம் தீர்மான எண், **112** நாள். **30.08.2022–**ல் நிர்வாக அனுமதி வழங்கியதின் அடிப்படையில் விலைப்புள்ளி **04.11.2022–**ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒன்றுக்கு | தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | AIMS Netcafe, Panruti | 860/- | 30x860 | **25800.00** |
| 2 | Hi-Tech Systems, Panruti | 900/- | 30x900 | 27000.00 |
| 3 | GRK Associate, Panruti | 930/- | 30x930 | 27900.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AIMS Netcafe நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 3110/2017/பி4**

**2.** இந்நகராட்சியில் உள்ள கணினிகளுக்கு **2** எண்ணிக்கையில் HP Printer புதியதாக வாங்குவதற்கு நகர்மன்றம் தீர்மான எண், **858** நாள். **30.11.2021–**ல் நிர்வாக அனுமதி வழங்கியதின் அடிப்படையில் விலைப்புள்ளி **04.11.2022–**ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒன்றுக்கு | தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | AIMS Netcafe, Panruti | 37800/- | 2x37800 | 75600.00 |
| 2 | Techno, Panruti | 38600/- | 2x38600 | 77200.00 |
| 3 | GRK Associate, Panruti | 38100/- | 2x38100 | 76200.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AIMS Netcafe நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 3110/2017/பி4**

3. இந்நகராட்சியில் உள்ள ஆணையாளர் அறைக்கு 0.6 Kva UPS 1 எண்ணிக்கையில் புதியதாக வாங்குவதற்கு நகர்மன்றம் தீர்மான எண், **32** நாள். **23.05.2022–ல்** நிர்வாக அனுமதி வழங்கியதின் அடிப்படையில் விலைப்புள்ளி **04.11.2022–ல்** கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒன்றுக்கு | தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | AIMS Netcafe, Panruti | 7800/- | 1x7800 | 7800.00 |
| 2 | Techno, Panruti | 8300/- | 1x8300 | 8300.00 |
| 3 | GRK Associate, Panruti | 8050/- | 1x8050 | 8050.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AIMS Netcafe நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 3110/2017/பி4**

4. இந்நகராட்சியில் கணினி பிரிண்டரில் பிரதி (Print) எடுக்க பயன்படும் Colour Ink bottle 24 எண்ணிக்கையிலும் மற்றும் Black ink bottle 16 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 40 எண்ணிக்கையிலும் Ink Bottle புதியதாக வாங்குவதற்கு நகர்மன்றம் தீர்மான எண், **33** நாள். **23.05.2022–ல்** நிர்வாக அனுமதி வழங்கியதன் அடிப்படையில் விலைப்புள்ளி **04.11.2022–ல்** கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒன்றுக்கு | தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | AIMS Netcafe, Panruti | 1975/- | 40x1975 | 79000.00 |
| 2 | Techno, Panruti | 2150/- | 40x2150 | 86000.00 |
| 3 | GRK Associate, Panruti | 2130/- | 40x2130 | 85200.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AIMS Netcafe நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 3110/2017/பி4**

5. அரசாணை (நிலை) எண்.92 மற்றும் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022ன் படி வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டங்கள் நடத்திட வருகை பதிவேடுகள் 132 எண்ணிக்கை மற்றும் தீர்மான பதிவேடுகள் 165 எண்ணிக்கை Tamilnadu Multipurpose Indco serve, Trichy நிறுவனத்திலிருந்து வாங்கிய வகையில் செலவினம் ரூ.1,65,495/- மற்றும் கூட்டங்களுக்கு தேவையான பேனர்கள் VPM Dt Printing & Stationary service Ind co –op society Limited நிறுவனத்திலிருந்து அச்சடித்து பெறப்பட்ட வகையில் செலவினம் ரூ .16,000/-ஐ வழங்க கோரி பட்டியல் வரப்பட்டுள்ளது . மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1300/2022/எப்1**

6. பண்ணுருட்டி நகராட்சிக்கு - KNMT (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23) நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.42.00/- இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண் G.O.(4D) No.18 நாள்.21.10.2022 தேதிய கடிதத்தில் முழுமானியத்துடன் நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டு வரப்பெற்றுள்ள பணிகளின் விவரம் கீழ்வருமாறு.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வார்டு எண் A Block 21 TS No. 33, வார்டு எண்.2 விழமங்கலம் பிள்ளையார் கோவில் குளம் துார்வாரி மேம்படுத்தும் பணி | 42.00 |

மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு **ரூ.42.00/-** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு KNMT (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23) நிதியின் கீழ் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். 1091/இ1/2022**

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-2022 (Un Tied Grant) நிதியின் கீழ் வார்டு எண்.22 காமராஜர் சந்து ஏற்கனவே பழுதடைந்த சிறு பாலம் திருப்பி கட்டுதல் (Unicode No.095022S045) பணிக்கு மதிப்பீடு ரூ.1.08/- இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.31112/2021/CFC-1 நாள்.23.09.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, நகரமன்ற தீர்மான எண்.153 நாள்.13.10.2022-ல் மன்றம் அனுமதி வழங்கியதற்கிணங்க, 15.11.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. மணிமாலா க/பெ முருகன், ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி. | 1.08 | 0.10 சதவிகிதம் குறைவு |
| 2 | திருமதி. சுகுணாதேவி, ஒப்பந்ததாரர், கடலூர் . | 1.08 | 0.36 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. மணிமாலா க/பெ முருகன் , பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.10 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண்..2660/2022/இ1**

8. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் கஸ்தூரிபாய் தெரு, பனங்காட்டு தெரு, தனபால் தெரு மற்றும் அப்பாளுத் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சிமெண்ட் சாலைகளில் சேதம் அடைந்துள்ள பகுதிகளை சீரமைக்க மேலும் பனங்காட்டு தெரு மற்றும் நாடார் காலனி இணைப்பில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூராகவும் உள்ளதாக நகரமன்ற வார்டு உறுப்பினர் கோரியதற்கிணங்க மேற்கண்ட சாலைகள் மற்றும் சிறுபாலம் சீரமைக்கும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு மன்ற பொருள் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2022-23 கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்..3058/2022/இ1**

9. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வருவாய் நிதி 2022–23 நிதியின் கீழ் நகரமன்ற தலைவர் அவர்களின் அறையில் புதிய மேஜையுடன் கூடிய அமரும் இருக்கைகள், VIP இருக்கைகள், LED TV அமைத்தல், மின் விசிறி, மற்றும் வெளி வராண்டாவில் மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00/– இலட்சத்திற்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி நாள்.19.10.2022–ல் மன்றம் அனுமதி வழங்கியதற்கிணங்க 15.11.2022–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/S. RDR கன்ஸ்ட்ரக் ஷன் , ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி. | 2.00 | 0.15 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூர். | 2.00 | 1.07 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S. RDR கன்ஸ்ட்ரக் ஷன் „ பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.15 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண். 2815/2022/இ1**

**10.** பண்ருட்டி நகராட்சியில் 2021–22க்கான ஒரு ஆண்டு சாதனை திட்டப்பணிகளின் விபரத்தை தமிழ் தினசரி நாளிதழான தினத்தந்தி நாளிதழில் நாள்.22.05.2022 அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு. தி தந்தி டிரஸ்ட் நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.45,911.00/–ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண். / 2022 /இ1**

11. பண்ணுருட்டி நகராட்சி வடகிழக்கு பருவமழைக்கு முன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நகராட்சி சாலைகளில் சேதமடைந்த பகுதிகளில் WMM அமைக்கும் பணிக்கு ரூ.5.00/- இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,
3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2947 /2022 /இ1**

12. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வருவாய் நிதி 2022-23 நிதியின் கீழ் வடகிழக்கு பருவமழைக்கு முன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நகராட்சி சாலைகளில் சேதமடைந்த பகுதிகளில் WMM அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00/- இலட்சத்திற்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி நாள்.19.10.2022-ல் மன்றம் அனுமதி வழங்கியதற்கிணங்க 15.11.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட )** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி . | 5.00 | 0.11 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூர். | 5.00 | 0.33 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன், பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.11 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண். 2947/2022/இ1**

13. பண்ருட்டி நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் உள்ள கழிவறை மற்றும் குளியல் அறை பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும், நகராட்சி அலுவலகத்தில் மேற்கூறையில் உள்ள தட்டோடுகள் உடைந்து கட்டிடத்திற்கு மழைக்காலங்களில் நீர் கசிவு ஏற்படுவதால் பராமரிப்பு பணிக்கு ரூ.5.00/- இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி (2022-23)-ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,

**கோப்பு எண். / 2022 /இ1**

14. பண்ருட்டி நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் பயன்படும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO) அமைக்கும் பணிக்கு ரூ.0.40/- இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது . மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி (2022-23)-ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,

**கோப்பு எண். / 2022 /இ1**

15. 15வது நிதிக்குழு மானியம் **2021-2022**ன் கீழ் Un Tied Grant நிதியில் பண்ணுருட்டி நகராட்சிக்கு ரூ.**28.89** இலட்சம் மதிப்பீட்டில் **1** முதல் **33** வார்டுகளிலும் தெருவிளக்குகள் அமைக்காமல் விடுபட்ட மின்கம்பங்களுக்கு புதியதாக LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களின் கடித ந.க.எண்.**31112/2021/**CFC, நாள்.**14.10.2022** அனுமதி அளித்ததற்கிணங்க, மேற்கண்ட பணிக்கு உரிய நிர்வாக அனுமதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டபணியின் அவசரஅவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.3282/இ1/2021**

**16.** பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் 40W குழல் விளக்குகள் 1704 சோடியமாக விளக்குகள் 351 எண்ணிக்கை உயர்மின் கோபுர விளக்குகள் 51 எண்ணிக்கை ஆக மொத்தம் 2106 தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்க கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களிடமிருந்து 14.10.2022 ஆம் தேதி G.O (MS) No.145 அரசாணை எண்ணில் ரூபாய் 239.74 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை SUIDF (2022–23)–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,

**கோப்பு எண்.2802/இ2/2022)**

17. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திருவதிகை கிராமம் வார்டு சி, பிளாக் 19, (நகரளவு எண்.7/2B) (ப.எண்.902/1, 903/3) 3.35 ஏக்கர் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து முழுமை திட்டத்தில் விவசாய உபயோகப் பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றித்தர திரு.ஆர்.பவித்ரராஜன் மற்றும் கே.ரமேஷ்குமார் ஆகியோர் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி இடம் நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முழுமை திட்டத்தில் விவசாய உபயோக பகுதியாக உள்ளது. எனவே நிலம் பயன்பாடு மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை மற்றும் ஆலோசனை ஏதும் அளிப்பதாக இருந்தால் 30 நாட்களுக்குள் எழுத்து பூர்வமாக நகராட்சி ஆணையர் பண்ருட்டி அவர்களுக்கு தெரிவிக்குமாறு கடந்த 08.06.2022 அன்று தினக்குரல் தமிழ் நாளிதழிலும் Southern Mail என்ற ஆங்கில தினசரி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்கண்ட நிலம் பயன்பாடு மாற்றம் தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டு 30 தினங்கள் கடந்த நிலையில் ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை. எனவே விவசாய உபயோக பகுதியாக உள்ள நிலத்தின் பயன்பாட்டினை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்திட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.1579/2022/எப்1**

18. மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாலாஜா பிரதான வாய்க்காலை HITACHI இயந்திரம் கொண்டு வாடகை அடிப்படையில் செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்து தூர்வாரும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 03.11.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வாடகை ரூ.<br>(ஒருமணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1 | திரு.வி. சுரேஷ்பாபு<br>மஞ்சக்குப்பம்<br>கடலூார் | 2050/– |
| 2 | ஸ்ரீபிரமானந்தா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>தட்டாஞ்சாவடி<br>பண்ணுருட்டி | 1950/– |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** :

**1.** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் (2) ல் காணும் ஒப்பந்தப்புள்ளி வ.எண் (1)ல் காணும் ஒப்பந்தப்புள்ளியை விடக் குறைவாக உள்ளது. எனவே அதனை மன்றம் முடிவு செய்யலாம்.

**2.** அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 2612/2022/எச்2**

**19.** மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் சார்பில் தூய்மை இந்தியா இயக்கத்தின் வாயிலாக நடத்தப்படும் Swachh Survekshan-2023 கணக்கெடுப்பில் “திறந்த வெளியில் கழிப்பிடம் இல்லாத நகரம் “ (ODF + ) என்ற சான்றிதழ் பெறுவதற்கு சுய பிரகடனம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் கோரும் விதமாக நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 10000/– (பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>கோப்பு எண்: 3001/ 2022 / எச்2</u>**

**20.** தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின்கீழ் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் மூலமாக நடத்தப்பெறும் Swachh Survekshan-2023 கணக்கெடுப்பில் பண்ணுருட்டி நகரம் குப்பையில்லா நகரம் (GFC Star Rating ) என்ற மூன்று நட்சத்திர தரச்சான்றிதழ் பெறுவதற்கு சுய பிரகடனம் செய்து பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான நாளிதழ் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 10000/– (பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்:3001/ 2022 / எச்2**

**21.** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் JCB வாகனம் TN31H 8253 எஞ்சின் பழுதடைந்துள்ளதைத் தொடர்ந்து டயனடெக் நிறுவனம் ஆய்வு செய்து கிர்லோஸ்கர் கேர் பாரத் டீசல் சேல்ஸ் அன் சர்வீஸ், பட்டானூர் நிறுவனத்திற்கு பழுதுநீக்க பணிக்கு பரிந்துரை செய்துள்ளது. JCB வாகனம் மழைக்கால அன்றாட பணிகளுக்கு அவசியமாக தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி உடன் பழுதுநீக்கப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே பாரத் டீசல் சேல்ஸ் அன் சர்வீஸ் நிறுவன மதிப்பீட்டின்படியான தோராய செலவினம் ரூ. 2.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) மழைக்கால முன்னெச்சரிக்கையாக அனைத்து உபகரணங்களையும் பயன்பாட்டிற்கு தயாராக வைக்கப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுதுநீக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

**கோப்பு எண்: 3022/2022/எச்1**

**22.** இந்நகராட்சிக்குட்பட்ட கெடிலம் ஆற்றங்கரைப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள திடக்கழிவுகளை அகற்றி அப்புறப்படுத்தி ஓரமாக குவியலாகக் குவிக்கும் பணிக்கான வாகனங்களின் வாடகைக்கு ஒப்பந்தப்புள்ளி 16.11.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வாகனம் / இயந்திரம் | வாடகை (ஒருமணி நேரத்திற்கு) ரூ. | |
|---|---|---|---|
| | | RDR கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | V. சுரேஷ்பாபு |
| 1 | HITACHI இயந்திரம் | 1950 | 2050 |
| 2 | செயின் டோசர் | 1800 | 2000 |
| 3 | டிப்பர் லாரி | 600 | 750 |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:–**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் RDR கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பண்ணுருட்டி குறைவாக உள்ளதால் அதனை மன்றம் முடிவு செய்யலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்: 2812/2022/எச்1**

**23.** இந்நகராட்சி பொதுசுகாதாப்பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்தும் புகைமருந்து தெளிப்பான்களை பழுதுநீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனம் | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | S.S எண்டர்பிரைசஸ்,<br>மணலி,<br>சென்னை – 68 | ரூ. 21650/– |
| 2 | R.K. ஏஜென்ஸி,<br>மணலி,<br>சென்னை – 68 | ரூ. 24200/– |
| 3 | S.N எண்டர்பிரைசஸ்,<br>வலசரவாக்கம்,<br>சென்னை – 87 | ரூ. 25550/– |

மேற்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள S.S எண்டர்பிரைசஸ் நிறுவனம் விலைப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

**கோப்பு எண்: 2285/ 2022 / எச்2**

**24.** பண்ணுருட்டி நகராட்சியில் முன்னாள் நகராட்சி பொறியாளராக பணிபுரிந்த திரு. K. சக்திவேல் என்பவர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறாமல் வெளிநாடு சென்ற காரணத்தினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து (Removed from Service) தனக்கு மீண்டும் பணி வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.NO. 17234/2017–ல் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் இருந்து. மேற்படி வழக்கு 16.09.2022–ல் விசாரணைக்கு வந்ததில் திரு. T. சீனுவாசன், சிறப்பு அரசு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை முடித்து அதற்கான இறுதி உத்தரவினை 16.09.2022 –ல் பெற்றுள்ளதால் மேற்படி வழக்கினை முடித்து கொடுத்தற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 20,000/– வழங்க கோரி திரு. T. சீனுவாசன் அவர்களிடம் இருந்து 19.09.2022–ல் கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** 4001 /2015 /சி1

25. பண்ருட்டி நகராட்சிக்கு – சொந்தமான ஈப்பு வாகனம் (TN31– AH 7374) என்ற வாகனத்திற்கு (28.11.2022) அன்று காப்பீடு தொகை முடிவடைகிறது. எனவே அதனை புதுப்பிக்க ரூ.11,284/– உரிய நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகையை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்: 2989/2022/இ2**

**நகர்மன்ற தலைவர்**
**பண்ணுருட்டி நகராட்சி**